தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p422-447** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# "இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தின் அறியப்படாத வீரர்களின் பங்களிப்பு: ஓர் வரலாற்று ஆய்வு"

## The Contribution of Unsung Heroes of Sivaganga District to the Indian Freedom Struggle: A Historical Study

**முனைவர் தி. பாலசுப்பிரமணியன்,**

*உதவி பேராசிரியர், வரலாறு மற்றும் சுற்றுலாவியல் துறை, சமூக அறிவியல் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.*

**Dr. T. Balasubramanian*,**

*Assistant Professor, Department of History and Tourism Studies, School of Social Sciences, Tamil Nadu Open University, Saidapet, Chennai, Tamil Nadu, India*
*Tel: 9600248107,*
*ORCID: https://orcid.org/0000-0002-8796-0068 Email ID: balasubramanian834@gmail.com*

**பேராசிரியர் வே. வெங்கட்ராமன்,**

*முதல்வர் (ஓய்வு), வரலாற்று உயராய்வு துறை, ராஜூஸ் கல்லூரி ராஜபாளையம்.*

**Prof. V. Venkatraman,**

*Principal (Retd.) Post Graduate & Research Department of History, Rajus' College, Rajapalayam*
***ORCID***: *https://orcid.org/0000-0002-0902-9411*

*Article history*
Received: 20-07-2026
Revised: 30-07-2026
Accepted: **04-08-2026**

*Corresponding Author Email: *balasubramanian834@gmail.com*

**Abstract:** India's independence was a historic achievement made possible through the sacrifices, dedication, and relentless efforts of countless freedom fighters. Thousands of men and women fought for the liberation of the nation without caring for their lives, possessions, or personal interests. The freedom we enjoy today is the result of their immense sacrifices and unwavering commitment to the cause of national independence. However, only a few freedom fighters have received widespread recognition, while the sacrifices and contributions of many others remain largely unknown to the outside world. It is therefore essential to bring the contributions of these unsung freedom fighters of Tamil Nadu to the attention of the present and future generations. Their courage, sacrifice, and commitment to the nation deserve to be documented, remembered, and commemorated as an integral part of India's freedom struggle. The significance of the contributions of freedom fighters can never be overstated. Every Independence Day, the nation remembers the thousands of men and women who dedicated themselves to the cause of national liberation. Their sacrifices remain an enduring source of inspiration, and the people of India will continue to remember and honour their invaluable contributions to the nation's freedom.

**Keywords:** *Sivaganga, Indian Freedom Struggle, Quit India Movement, Devakottai August Revolution,*

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்தியாவின் சுதந்திரம் என்பது எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும் கிடைத்த மாபெரும் வரலாற்றுச் சாதனையாகும் தங்கள் . உயிரையும், உடைமைகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய ஆயிரக்கணக்கான வீரர்களின் தியாகத்தின் பலனாகவே இன்று நாம் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுதந்திர போராட்ட வீரர்கள் தியாகத்தால் இன்று நாம் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் சிலர் மட்டுமே வெளி உலகிற்கு தெரிகின்றனர் பல தியாகம் வெளியே தெரியாமல் இருக்கிறது.தமிழகத்தில் இது போன்ற அறியப்படாத வீரர்களின் தியாகத்தை வருங்கால தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் முக்கியத்துவத்தை ஒருவர் எவ்வளவு சொன்னாலும் போதாது. ஒவ்வொரு சுதந்திர தினத்திலும், தங்கள் நாட்டு மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஆயிரக்கணக்கானோரை நாடு நினைவு கூர்கிறது. அவர்களின் தியாகங்களை நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

**திறவுச் சொற்கள் :** சிவகங்கை, இந்திய விடுதலைப் போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், தேவகோட்டை ஆகஸ்ட் புரட்சி.

**முன்னுரை** (Introduction)

இந்திய விடுதலைப் போராட்டம் எண்ணற்ற வீரர்களின் தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் துணிச்சலால் உ தென்னிந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான ஆரம்பகால எதிர்ப்புப் போராட்டங்கள் **18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில்** தொடங்கி, பின்னர் இந்திய அளவிலான விடுதலை இயக்கத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைத்தனகுறிப்பாக ., **வீரமங்கை வேலுநாச்சியாரின் ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டம், 1799–1801ஆம் ஆண்டுகளின் தென்னிந்தியக் கிளர்ச்சி )South Indian Rebellion), மருது சகோதரர்களின் ஆயுதப் போராட்டம் மற்றும் 1801ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி பிரகடனம்** ஆகியவை தென்னிந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

தொடர்ந்து, **1857ஆம் ஆண்டின் இந்தியப் பெருங்கிளர்ச்சி, 1885ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம், 1919ஆம் ஆண்டு ரவுலட் சத்தியாகிரகம், 1920–1922ஆம் ஆண்டுகளின் ஒத்துழையாமை இயக்கம், 1930ஆம் ஆண்டின் சட்டமறுப்பு இயக்கம் மற்றும் 1942ஆம் ஆண்டின் வெள்ளையனே வெளியேறு இயக்கம்** ஆகியவை இந்திய விடுதலைப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தின. இப்போராட்டங்களில் புகழ்பெற்ற தலைவர்களுடன், வரலாற்றில் போதிய அங்கீகாரம் பெறாத பல அறியப்படாத வீரர்களும் முக்கிய பங்களிப்பைச் செய்தனர்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

இவ்வகையில், **சிவகங்கைப் பகுதி** இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்களின் ஆங்கிலேய எதிர்ப்புப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து, **தென்னிந்தியக் கிளர்ச்சியின்** தாக்கமும் இப்பகுதியின் விடுதலை உணர்வை வலுப்படுத்தியது. பின்னர் தேவகோட்டை, காரைக்குடி, பனங்குடி, திருவாடானை, பூலாங்குறிச்சி, கொல்லங்குடி உள்ளிட்ட பகுதிகளில் தேசிய இயக்கங்கள் தீவிரமடைந்தன. குறிப்பாக, **1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது**, மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்று ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.

இவ்வாய்வு, **தென்னிந்தியக் கிளர்ச்சியிலிருந்து 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம் வரை சிவகங்கைப் பகுதியில் நடைபெற்ற ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டங்களையும், குறிப்பாக அதிகம் அறியப்படாத சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பையும்** வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிவகங்கைப் பகுதியின் தனித்துவமான பங்களிப்பை வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

### இந்திய விடுதலைப் போராட்டமும் அறியப்படாத தியாகிகளின் பங்களிப்பும்

வரலாற்றை ஆராய்ந்தால், பெரும்பாலான சுதந்திரப் போராளிகள் போர் அல்லது தொடர்புடைய துறைகளில் முன் முறையான பயிற்சி இல்லாமல் சுதந்திரப் போராட்டத்தில் இணைந்ததைக் காண்கிறோம். எதிர் சக்தியால் கொல்லப்படலாம் என்பதை நன்கு அறிந்தே அவர்கள் போர்களுக்கும் போராட்டங்களுக்கும் சென்றனர். சுதந்திரப் போராளிகள் கொடுங்கோலர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் மட்டுமல்ல, இலக்கியம், சட்ட வக்கீல்கள், சுதந்திரப் போராட்டத்திற்கு பணம் அளித்தவர்கள் போன்றவர்கள் மூலம் போராட்டங்களில் இணைந்தவர்கள். பெரும்பாலான துணிச்சலான இதயங்கள் அந்நிய சக்திகளுக்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தின. அவர்கள் தங்கள் சக மக்களை தங்கள் உரிமைகளை உணரச் செய்தனர், மேலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்த அனைத்து சமூக அநீதிகளையும் குற்றங்களையும் சுட்டிக்காட்டினர்.

அவற்றில் காந்திஜியின் சத்தியாகிரகம் மற்றும் அகிம்சை வழிப் போராட்டங்களும் அவருடைய தலைமையும் மிக முக்கியக் காரணமாகும். அகிம்சை மற்றும் சத்தியாகிரகப் போராட்டங்கள் போர் முனையில் ஆயுதங்களைக் கொண்டு போர் புரிதலைவிட வலிமையான ஆயுதமாகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாது மிகப்பெரும் தாக்கத்தை ஆங்கிலேயரின் மனதில் ஏற்படுத்தியது. சத்யாகிரகம் என்பது எதிரியையும் நண்பனாக மாற்றும் ஓர் அகிம்சை வழியாகும்.

**சிவகங்கைப் பகுதியில் ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கங்களின் வரலாற்றுப் பின்னணி**

இந்திய சுதந்திரப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியா ஒரு மிகப்பெரிய ஒரு விடுதலையை நோக்கி பயணம் செய்தது சிவகங்கை ராமநாதபுரம் மாவட்டத்தின் பிரிக்க முடியாத அங்கமாக மாறியது வீரமங்கை வேலுநாச்சியார் ஆங்கிலேயருக்கு எதிராக போர் செய்த காலகட்டத்தில் இருந்து மற்றும் பின் நாட்களில் மருது சகோதரர்கள் விதைக்கப்பட்ட விதை திருச்சிராப்பள்ளி பிரகடனம் ஆகும் மேலும் 1885 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்ட போது மகாத்மா காந்தி அவர்கள் தலைமையில் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது ***தனிநபர் சத்தியாகிரகம் 1941 1942 ஆகஸ்ட் புரட்சி*** இது சிவகங்கை மாவட்டம் ***பனங்குடி பூலங்குறிச்சி தேவகோட்டை கொல்லங்குடி காரைக்குடி திருவாடானை*** போன்ற பகுதிகளில் தீவிரமடைந்தது இதனால் ஆங்கிலேயர்கள் திரும்பிப் பார்க்கிற விதமாக இந்தியாவை விட்டு போக வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டதுக்கு சுதந்திரப் போராட்டத்தில் சிவகங்கை முக்கிய பிரதிபலிப்பாக இருந்தது என்பது மறக்க முடியாத ஒன்று மற்றும் தேவகோட்டை தேசிய பூங்கா என்று அழைக்கப்படும் நாம சுதந்திரப் போராட்ட தியாகிகள் ஆலோசனை கூடும் இடமாகவும் மற்றும் ***காரைக்குடி காந்தி திடல்*** என்று சொல்லக்கூடிய இடத்தில் சுதந்திரப் போராட்டத்தில் போர்க்களமாகவும் அதில் ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த போராட்டத்தில் நெல்லியான் போன்ற வீரர் துப்பாக்கி சூட்டில் இறந்த மிகப்பெரிய ஒரு வரலாற்றின் திருப்பமாக கருதப்பட்டது . அதேபோல் சிவகங்கையிலிருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ***பனங்குடி கிராமத்தில் புகைய வேண்டிய நிலையத்தில் உள்ள ரயில் பெட்டிகளை தீயிட்டுக் கொளுத்தி 1942 ஆகஸ்ட் புரட்சியில்*** இந்தியா திரும்பி பார்க்கும் விதமாக நடந்தது என்பது சிவகங்கை வரலாற்றின் வீரமிக்க ஒரு செயல்பாடாகும் சுதந்திரப் போராட்டத்தின் சிறப்பு மிகுந்த ஒரு பகுதியாக காணப்பட்டது மேலும் சிவகங்கை பகுதி முழுவதும் ***வெள்ளையனே வெளியேறு இயக்கம் சாமானியர் மக்கள் அனைவராலும் பரப்பப்பட்டதால்*** ஆங்கிலேயருக்கு எதிராக மிகப்பெரிய ஒரு போராட்டமாக அமைந்து என்று கூறலாம்.

**1942 ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் சிவகங்கை மக்களின் பங்களிப்பு**

மேலும் இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடப்பதற்கு முக்கிய காரணமாக ரவுலட் சத்தியாகிரகம் 1919 அணிசேரா இயக்கம் 1920 -22 சட்டமறுப்பு இயக்கம் 1930 தனி நபர் சத்யா கிரகம் 1940 மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942 ஆகியவை சுதந்திரப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

வெள்ளியனே வெளியேறு இயக்கத்தின் போது சிவகங்கை பகுதியில் தேவகோட்டை காரைக்குடி பனங்குடி போன்ற பகுதியில் மிகப் பெரிய ஒரு போராட்டம் புரட்சியின் வெடிக்க ஆரம்பித்தன இதுவே சுதந்திர போராட்டத்தின் முக்கிய பங்கா கருதப்படுகிறது. வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஒவ்வொரு இந்தியனின் ரத்தத்திலும் ஓடச் செய்தது. இந்தப் போராட்டம் மாபெரும் மக்கள் பங்கேற்பு இயக்கமாக அமைந்தது இந்தியாவின் ***சுதந்திரத்திற்காக செய்ய அல்லது செத்துமடி என்ற உறுதியுடன் நாடு களத்தில் இறங்கியது***. 1942 இயக்கம் இளைஞர் இயக்கமாகவும் பொதுமக்கள் இயக்கம் ஆகும் அனைவரும் களத்தில் பள்ளி கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலைகள் அனைவரும் சமுதாயத்தில் இறங்க ஆரம்பித்தனர் ஆங்கிலேயர்களால் ஒன்றும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

### சுதந்திர போராட்டக் தியாகி கி.ராமசாமி



சிவகங்கை மாவட்டம் இவர் 13-10-1918 அன்று பிறந்தார் திருப்பத்தூர் .இவர் தந்தை கிருஷ்ணசாமி ஆவர் சுதந்திர போராட்டக் தியாகி ராமசாமி இளம் வயதிலேயே நாட்டின் பற்று அதிகம் கொண்டவர் ஆவர் . ஆங்கிலேயர் களிடமிருந்து தன் தாய் நாட்டை மீட்க இவர் 1941 ல்.தனி நபர் சத்தியாகிரகம் போராட்டத்தில் கலந்து கொண்டார் . மற்றும் ஆகஸ்ட் புரட்சி 1942 ல் வெள்ளையர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் தன் தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்க்கு எதிராக போராடினார் . இதனால் இந்திய பாதுகாப்பு விதிகளின் 38(5)34 (6k) மற்றும் 38 (1) பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டு 4 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது சென்றார் . ஆலிபுரம் சிறைச்சாலை வைக்கப்பட்டார்.

### சுதந்திர போராட்ட தியாகி சி. வைரவன்



இந்திய சுதந்திர போராட்ட தியாகி சி. வைரவன் இவர் சிவகங்கை மாவட்டம் **காரைக்குடி அருகே உள்ள கல்லிவயல் கிராமத்தைச்** சார்ந்தவர் ஆவர். இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக களத்தில் இறங்கியவர் அவர் சுபாஷ் சந்திர போஸ் ஐ என் ஏ இயக்கத்தில் சேர்ந்து தன் தாய் நாட்டிற்காக போராடியவர் ஆவார் இவர் இரண்டாம் உலகப்போரில் INA படைப்பிரிவில் இருந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக மூன்று வருஷம் பணியாற்றினார்.

### சுதந்திர போராட்ட தியாகி k.குப்புசாமி




இந்திய சுதந்திர போராட்ட தியாகி k.குப்புசாமி அவர்கள் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கரிசல் குளம் இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டார் இவர் சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான ஐஎன்ஏ (INA) படைப்பிரிவில் பணியாற்றினார். ஆங்கிலருக்கு எதிரான

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**


போராட்டங்களில் கலந்துகொண்டு இந்திய சுதந்திரம் அடைவதற்காக தனது வாழ்க்கை அர்பணித்தவர் ஆவார்.

**சுதந்திரப் போராட்ட தியாகி அ.சுப்பையா**



இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி அ.சுப்பையா அவர்கள் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கொத்தமங்கலம் உரை சார்ந்தவர் ஆவார் இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக சுபாஷ் சந்திர போஸ் படை பிரிவில் கலந்து கொண்டு . இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு முக்கியமாக வெள்ளையனே வெளியேற இயக்கத்தில் 1942 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார் இவர் இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயனை எதிர்த்து தீரமுடன் போரிட்டு தன்னுடைய வாழ்க்கை இந்திய நாட்டுக்காக அர்ப்பணித்த ஒரு மாபெரும் த தியாகி ஆவார்.

**சுதந்திர போராட்ட தியாகி A. சுப்பையா ஆசாரி**



இந்திய சுதந்திர போராட்ட தியாகி சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா A. தெக்கூர் கிராமத்தைச் சார்ந்தவர் ஆவார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக ஆகஸ்ட் புரட்சி வேலை இயக்கத்தில் கலந்து கொண்டு நாட்டின் சுதந்திரத்திற்காக போராடியவர் ஆவார்.

**A. மாயக்கண்ணு**



இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி இவர் சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் அருகே உள்ள பிரவலூர் கிராமத்தில் சார்பாக இவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டு சுபாஷ்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

சந்திர போஸ் படை பிரிவில் ஐ என் ஏ INA பிரிவில் கலந்துகொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக தான் நாட்டுக்கு சுதந்திரம் வேண்டும் என்று போராடிய சுதந்திர போராட்ட தியாகி ஆவார்.

**சதாசிவம் பிள்ளை**



இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி இவர் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இவருக்கு தந்தை அங்கமுத்து பிள்ளை தாயார் செல்லம்மாள் அவர்களுக்கு மகனாக பிறந்தவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் இந்திய நாட்டு சுதந்திரம் அடைவதற்கு ஐ என் ஏ படை பிரிவில் மற்றும் ஆகஸ்ட் புரட்சி பங்கேற்று ஆங்கிலேயருக்கு எதிராக போராடியவர் ஆவார்.

**பெ.வெ.ராமானுஜம்**



பெ.வெ.ராமானுஜம் இங்கே சுதந்திர போராட்ட தியாகி சிவகங்கை மாவட்டம் சிவகங்கை போஸ் நகரை சார்ந்தவர் இவர் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் ஐ என் ஏ படைப்பிரிவில் ஆகஸ்ட் புரட்சி இந்தியா சுதந்திரம் அடைய மற்றும் நோக்கில் ஆங்கிலேயருக்கு எதிராக குரல் கொடுத்தவராவார் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முதன்மையான பங்கை தன் வாழ்நாளில் அர்ப்பணித்தவர் ஆவார்.

**கு.சு முத்துப்பிள்ளை**




இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி கு.சு முத்துப்பிள்ளை இவர் சிவகங்கை மாவட்டம் கல்லூரணி கிராமத்தை சார்ந்தவராக இவர் இந்திய சுதந்திர போராட்டத்திற்காக இளமை முதலே தன்னுடைய வாழ்க்கை அர்பணித்தவராக இவர் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் உள்ள பிரிவில் ஐ என் ஏ பிரிவில் கலந்துகொண்டு இந்திய நாட்டிற்காக ஆகஸ்ட் புரட்சி ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடிய சுதந்திரப் போராட்டத்தில் தியாகி ஆவார்.

**ஆர் .வி. சுவாமிநாதன்**

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**



சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பாகனேரியில் 1908ம் . ஆண்டு பிறந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இவரின் பங்கு முக்கியமானது இவர் 1929 ஆம் ஆண்டு திருமங்கலத்தில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதியாக பங்கேற்றார் மற்றும் 1930 ஆம் ஆண்டு உப்பு சத்தியாகிரகம் போராட்டத்தில் பங்கேற்று தனது தாய் நாட்டிற்காக ஆங்கிலேயருக்கு எதிராக குரல் கொடுத்தவர் ஆவார் 1932 ஆம் ஆண்டு உத்தரையாமை இயக்கத்தில் பங்கு பெற்றார் மேலும் இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்த தருணத்தில் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு வெள்ளையர்களே இந்த நாட்டை விட்டு வெளியேறுதல் என்று சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக குரல் கொடுத்தவர் ஆவார் தன் வாழ்க்கையை இந்திய நாட்டிற்காக அர்ப்பணித்தவர் ஆவார்.


**சுத்தானந்த பாரதியார்**



இவர் 1897 ஆம் ஆண்டு மே 11ஆம் தேதி சிவகங்கை பிறந்தார் இவரது இயற்பெயர் வெங்கட் சுப்பிரமணியன் ராமேஸ்வரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு நடந்து சென்று கலந்து கொண்டார் திரு வி கா அவர்களுடன் இணைந்து கதர் பிரச்சாரம் மதுவிலக்கு தீண்டாமை ஒழிப்பு போன்ற பிரச்சாரங்களை ஈடுபட்டார் உலக அளவில் விடுதலை சிந்தனைகளை கொண்ட படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார் விடுதலை எழுச்சிக்கு வித்திட்ட முக்கியமான தலைவர்களில் ஒருவர் யோகி சுதானந்த பாரதியார் ஆவார்.

சுத்தானந்த பாரதி மதுரை பசுமலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஜி.சுப்பிரமணிய ஐயர், சுப்ரமணிய சிவா ஆகியோருடன் நட்பு ஏற்பட்டது. அதன் வழியாக சுத்தானந்த பாரதி இந்திய நாட்டு விடுதலையில் ஈடுபாடு கொண்டார்.

**ராம தனமணி செட்டியார்**




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் பிறந்தவர் இவர் இயற்பெயர் லட்சுமணன் செட்டியார் இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத்திற்காக காங்கிரஸ் கட்சியில் ஈடுபாடு

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

கொண்டார் .1942 ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் தேதி தேவகோட்டை நீதிமன்றம் அறிய விடுதலைப் போராட்ட வீரர்களால் எரியூட்டப் பெற்ற நாளில் கலந்து கொண்டார். தன் தாய் நாட்டிற்காக சுதந்திர வேட்கையில் ஆங்கிலருக்கு எதிராக போராட்டங்களில் கலந்து கொண்டவர் ஆவார் மத்திய அரசு வரை 1972 ஆம் ஆண்டு தாமிரபத்திரமும் பாராட்டு பத்திரமும் வழங்கி கௌரவித்தது சென்னையில் உள்ள காந்தி மண்டபத்தில் இவரது புகைப்படங்களை வைத்து மாநில அரச கவுரப்படுத்தியது இவர் 1994 ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் தேதி இயற்கை எய்தினார்.

**A.T..Chinnasamy சின்னசாமி**




சின்னசாமி இவர் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா மருதங்குடி சிராவில் பகுதியில் பிறந்தவரா அவர் ஆங்கிலத்திற்கு எதிராக தன் தாய் நாட்டிற்காக போராடியவர் அவர் மேலும் ஒரு ஒத்துழையாம இயக்கம் ஆகஸ்ட் புரட்சி 1942-ல் தன் தாய் நாட்டுக்காக இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றவர் ஆவார்.

**T.கருப்பையா**



இந்திய சுதந்திர போராட்ட தியாகி இவர் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா அருகே உள்ள மலம்பட்டி கிராமத்தைச் சார்ந்தவர் ஆவார் இவர் இளமை முதலில் இந்திய விடுதலை போராட்டத்தில் ஆர்வம் கொண்ட இவர் ஆங்கிலத்திற்கு எதிரான போராட்டங்களில் ஆகஸ்ட் புரட்சி 1942 ல் கலந்து கொண்ட தாய் நாட்டுக்காக சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டவர் ஆவார்.

**V. periasamy v. பெரியசாமி]**

\

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

சிவகங்கை மாவட்டம் ஏனாபுரம் கிராமத்தில் பிறந்தவர் . இவர் இந்திய தேசிய ராணுவத்தில் சுபாஷ் சந்திர போஸ் படை பிரிவில் ஆங்கிலேயருக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றார்.

**ராமு கண்ணு**




ராமு கண்ணு சுப்பிரமணி மகன் சிவகங்கை மாவட்டம் இந்திய சுதந்திர போராட்டத்தை தியாகி ஆவர் ஆகஸ்ட் புரட்சி 1942ல் ஆங்கிலேயருக்கு எதிராக சுதந்திரப் போராட்டக் களத்தில் இறங்கியவர் ஆவார்.

**தியாகி ராஜாங்கம் பிள்ளை**




இந்திய சுதந்திர போராட்ட தியாகி ராஜாங்கம் பிள்ளை சிவகங்கை மாவட்டம் கல்லூரணி கிராமத்தில் பிறந்தவராவார் இவர் 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு தன் தாய் நாட்டுக்காக பல்வேறு துன்பங்களை அனுபவித்தார் ஆவார் மற்றும் அதே காலகட்டத்தில் கேவுகோட்டை தண்டவாளத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக எதிர்ப்பு போராட்டம் நடத்திய 40 நாட்கள் சிறை சென்றவர் ஆவார் தன் வாழ்க்கையில் அது நாளை சிறையில் கழித்தும் ஆங்கிலேயருக்கு எதிராக தன் தாய் நாட்டிற்காக சுதந்திர அடைய வேண்டும் என்று ஒரே மூச்சாக செயல்பட்டவராவார்.

**தியாகி வீரப்பன்**



இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி வீரப்பன் சிவகங்கை மாவட்டம் பச்சட்டி கிராமத்தை சார்ந்தவர். இவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் 1942 ஆகஸ்ட் புரட்சி வெள்ளையனே வெளியேறு இயக்கங்களில் கலந்து கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக குரல் கொடுத்து சுதந்திரத்துக்காக போராடியவர் ஆவார்.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

**M முத்துச்சாமி**



M முத்துச்சாமி இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி சிவகங்கை மாவட்டம் புதுக்கோட்டை கிராமம் மானாமதுரை தாலுகா இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆகஸ்ட் புரட்சியில் கலந்து கொண்டார் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றார்.

**பாலபாரதி செலத்துரை**



தேவகோட்டை பகுதியில் பிரபலமாக இருந்த விடுதலை போராட்ட வீரர் சின்ன அண்ணாமலையை 1942-ல் கைது செய்து திருவாடனை கிளைச்சிறையில் அடைத்தது ஆங்கிலேய அரசு. இதை ஏற்றுக்கொள்ள முடியாத தேவகோட்டை, திருவாடானை வட்டார மக்களை ஒன்று திரட்டி சிறையை உடைத்து சின்ன அண்ணாமலையை மீட்டுக் கொண்டு வர முதல் காரணமானவர் பாலபாரதி செலத்துரை.

***இதன் காரணமாக ஆங்கிலேய போலீஸ் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள். (உயிரிழந்தவர்களுக்கான நினைவுச் சின்னம் தேவகோட்டை பேருந்து நிலையம் அருகில் உள்ளது***) செல்லத்துரையை கைது செய்ய தேடி அலைந்த ஆங்கிலேய போலீஸ், அப்பாவி மக்கள் மீது கடும் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தபோது. மூத்த தலைவர்களின் ஆலோசனையால் தலைமைறைவான செல்லத்துரை, நாடு விடுதலை அடைந்தபின்புதான் ஊர் திரும்பினார். அதுவரை அவர் இறந்து விட்டதாக மக்கள் நினைத்தனர்.

அப்படி பெரும் தியாகம் செய்து வந்தவரை வழக்கம்போல் புறக்கணித்தது காங்கிரஸ் தலைமை. தமிழகத்தில் நடந்த முதல் சட்டமன்றத் தேர்தலில் திருவாடனைத் தொகுதியில் வேறொருவருக்கு வாய்ப்பு கொடுத்தது. இதனால் கொந்தளித்த அப்பகுதி மக்கள் ஆதரவுடன் சுயேச்சையாக போட்டியிட்ட செல்லத்துரை, திருவாடனையின் முதல் எம்.எல் ஏ-வாக வெற்றி பெற்று சாதனை படைத்தார்….

**1942 ஆகஸ்ட் புரட்சியில் பாலபாரதி'**

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

பாலபாரதி' சர்தார் பொ. செல்லத்துரை 1942 ஆகஸ்ட் புரட்சியில் தமிழ்நாட்டில் தடம் பதித்த மிக முக்கிய விடுதலைப் போராட்டத் தளபதிகளுள் ஒருவர் ஆவார். திருவாடானை பகுதியைச் சேர்ந்த இவர், மக்களின் உரிமைகளுக்காகவும் தேச விடுதலைக்காகவும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர்.,

**திருவாடானை சிறை உடைப்பு நாயகன்**

1942-இல் மகாத்மா காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கிய போது, ஆங்கிலேய அரசு தியாகி சின்ன அண்ணாமலையை நள்ளிரவில் கைது செய்து திருவாடானை கிளைச்சிறையில் அடைத்தது. இச்செய்தி பரவியதும், திருவேகம்பத்தூரைச் சேர்ந்த பாலபாரதி செல்லத்துரை ஆயிரக்கணக்கான பொதுமக்களைத் திரட்டி திருவாடானை நோக்கிப் பேரணியாக வழிநடத்திச் சென்றார்.

சிறைச்சாலைக்கு முன் திரண்ட மக்கள் கூட்டத்தை அமைதிப்படுத்தி அமரவைத்த செல்லத்துரை, சிறைக்குள் இருந்த சின்ன அண்ணாமலையிடம் நேரடியாகச் சென்று, "உங்களை விடுதலை செய்ய சிறையை உடைக்க வந்துள்ளோம்" என்று கூறி, மக்களின் பலத்தோடு சிறைக்கதவுகளை உடைத்துக் கைதிகளை மீட்டெடுத்தார்.

**ஆங்கிலேயருக்கு எதிரான புரட்சி**

சிறை உடைப்பைத் தொடர்ந்து, திருவாடானை வட்டாரத்தில் ஆங்கிலேயரின் அதிகாரக் குறியீடுகளைத் தகர்ப்பதில் பாலபாரதி செல்லத்துரை தீவிரம் காட்டினார். வெள்ளையர்களின் நெற்களஞ்சியங்கள், தாலுகா அலுவலகங்கள், காவல் நிலையங்கள் மற்றும் கருவூலங்களைத் தகர்த்தார். அங்கிருந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு, நம் இந்திய தேசியக் கொடியை ஏற்றி அந்தப் பகுதிக்கே தற்காலிக விடுதலையை அன்றே பிரகடனம் செய்தார். ஆங்கிலேய அரசு கொண்டுவந்த "வாய்ப்பூட்டுச் சட்டத்தை" மீறி மேடைகளில் விடுதலைக்காக வீரமுழக்கமிட்டார்.

**தலைமறைவு வாழ்க்கையும் தியாகமும்**

இந்த அதிரடிப் புரட்சிகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயப் போலீசார் இவரைத் தீவிரமாகத் தேடினர். இதனால் இவர் நீண்ட காலம் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியிருந்தது. இப்போராட்டங்களின் போது செல்லத்துரை தன் சொத்துக்கள், சுகங்கள் என எல்லாவற்றையும் தேசத்திற்காக இழந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகே இவர் முழுமையாகத் தன் சொந்த ஊருக்குத் திரும்ப முடிந்தது.

**முதல் சட்டமன்ற உறுப்பினர் (1952)**

சுதந்திர இந்தியாவின் முதலாவது பொதுத்தேர்தல் 1952-இல் நடைபெற்ற போது, திருவாடானை சட்டமன்றத் தொகுதி உருவானது. அப்போது காங்கிரஸ் கட்சி நெய்வயல் ஆறுமுகம் சேர்வை என்பவரை வேட்பாளராக நிறுத்தியது. ஆனால், சமத்துவவாதியும் விடுதலைப் போராட்ட வீரருமான பாலபாரதி செல்லத்துரையை, மற்றொரு சுதந்திரப் போராட்டத் தியாகியான வென்னியூர் கார்மேகத் தேவர் ஆதரித்து சுயேச்சை வேட்பாளராக (இரட்டை அரச இலைச் சின்னத்தில்) களம் இறக்கினார். தியாகி கார்மேகத் தேவர் மற்றும் அப்பகுதி மக்களின் பெரும் பேராதரவோடு, காங்கிரஸ் கட்சி வேட்பாளரைத் தோற்கடித்து

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

திருவாடானை தொகுதியின் முதல் சட்டமன்ற உறுப்பினராக (MLA) பாலபாரதி செல்லத்துரை புதிய வரலாறு படைத்தார்.,

**தற்போதைய நினைவஞ்சலி**

மக்களால் "புரட்சித்தலைவர்", "மாவீரன்" என்று அன்போடு அழைக்கப்பட்ட இவரின் தியாகத்தைப் போற்றும் வகையில், இவரின் சொந்த ஊரான திருவேகம்பத்தூரில் பாலபாரதி செல்லத்துரைக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**(குறிப்பு: இவருடைய கொள்ளுப்பேரன் Dr. T.K. பிரபு டி.வி.கே அரசியல் கட்சி** காரைக்குடி **சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர்**

**வ. பழ. சுப்பையா தேவர்**

சிவகங்கை மாவட்டம், பூலாங்குறிச்சியில் 4-11-1912இல் பிறந்தவர் வ.பழ.சுப்பையா தேவர்.

1930இல் நடைபெற்ற வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று சிறை சென்றவர். 1935இல் பூலாங்குறிச்சியில் காங்கிரஸ் இயக்கம் உருவாயிற்று. அதனை சுப்பையா தேவர் வழிநடத்தினார். பூலாங்குறிச்சியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் எஸ்.சத்தியமூர்த்தி, சா.கணேசன் உள்ளிடட் தலைவர்களின் உரைகள் விடுதலை உணர்ச்சியை வீறுகொள்ளச்செய்தன.

1942 ஆகஸ்ட் 17இல் பூலாங்குறிச்சி மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அந்த ஊரின் தந்திக் கம்பிகளைத் துண்டித்தனர். தபால் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. மெயில் பஸ்களை கைப்பற்றி அதில் இருந்த தபால் பைகளைக் கொளுத்தினர். சுங்கச்சாவடியைப் பொசுக்கினர். போலீஸாரின் சீருடைகளைப் பறித்து அவர்களை விரட்டினர். ஊருக்கும் பிற பகுதிகளுக்கும் இடையிலிருந்த பாலங்களைத் தகர்த்தனர். 26.08.1942 வரை பூலாங்குறிச்சயைத் தங்களன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

போராளிகளைக் கைது செய்ய விரைந்தது 'மலபார் ஸ்பெஷல் போலீஸ்' , பெரும் பலகையைப் போட்டு நுழைந்து ஊரையே முற்றுகையிட்டனர். ஊர் மக்களும் போராளிகளும் அருகிலிருக்கும் 'கொட்டாரங்கொட்டி' எனும் மலைக்குச் சென்று பதுங்கிவிட்டனர். மக்களுக்கும் போலிஸீக்கும் சண்டை ஆரம்பித்தது. பேலிஸார்தாறு மாறாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். மூவருக்கு குண்டடிபட்டது. போராளிகள் அவர்களை ரகசியமாகத் தூக்கிக்கொண்டு போய் பக்கத்து கிராம மருத்துவர்களிடம் சிகிச்சைக்குச் சேர்த்தனர்.

மலையிலிருந்து மக்கள் இறங்கவில்லை. அங்குள்ள காங்கிரஸ் எம் எல் ஏ சொ.ராம.வள்ளியப்ப செட்டியார் வீட்டை போலீஸார் பிடித்து அதன் மேல் மாடியில் இருந்து 'மெஷின் கன்' மூலம் சரமாரியாகச் சுட்டனர். இதில் கருப்பன் எனும் தாழ்த்தப்பட்டவருக்கு சதை பிய்த்துக் கொண்டது. மதுவத் தேவர் என்பவரின் பெட்டிக்கடை நாசமானது. சுப்பையா

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

தேவரின் உணவகம் போலீஸாரால் உடைத்து நொறுக்கப்பட்டு சூறையாடப்பட்டது. ரூ.3000 மதிப்புள்ள பொருள்கள் சேதசமாயின. சுப்பையா தேவரின் மனைவியையும் அடித்துத் துன்புறுத்தி போலீஸ்லாக்கப்பில் வைத்தனர்.

30 பேரின் மீது வழக்குத் தொடரப்பட்டது. அன்று 27 பேர் கைதாகினர். இந்த இயக்கத்தலைவர் வ.பழ.சுப்பையா தேவர், குமரப்ப தேவர், ராமசாமி தேவர் ஆகியோர் தலைமறைவாயினர். கைதானவர்கள் 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை தண்டனை பெற்றனர். தலைமறைவானவர்கள் சரணடைந்த பின்னர் சிறைவைக்கப்பட்டனர். அனைவருக்குமாக தண்ட வரி ரூ.5000 விதிக்கப்பட்டது. மக்கள் எழுச்சி இந்தியாவில் ஏகாதிபத்திய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முதல் காரணமாக இருந்துள்ளது என்பதற்கு 'பூலாங்குறிச்சி' ஒரு எடுத்துக்காட்டு, இதை வழி நடத்திய தியாகி வ.பழ.சுப்பையா தேவர் எந்தவிதப் பதவிகளும் அனுபவிக்காமல் 29-11-1983 இல் 71 வயதில் மறைந்தார்.

**சுதந்திர போராட்டத்தில் பனங்குடி கிராமம்**



**முனைவர்.தி.பாலசுப்பியமணியன் வரலாற்று ஆய்வாளர் காரைக்குடி**

இன்று நாம் சுதந்திரமாக இருப்பதற்கு எண்ணற்ற தியாகங்களும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பையும் மகாத்மா காந்தியடிகளின் அஹிம்சை அன்பையும் வெளிப்படுத்தி காட்டி இந்த சுதந்திரத்தை பெற்றோம் இந்த சுதந்திரத்தை பெற்ற பின்பு நம் நாடு 1947 ஆகஸ்ட் 15 அன்று முதல் சுதந்திரதினமாக கொண்டாடி வருகிறோம் இந்த பல சுதந்திரப் போராட்ட தியாகிகளை நாம் நினைவு கூற வேண்டும் என்பது நமது கடமையாகும் .இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது தமிழகத்தில் வீரம் விளைந்த சிவகங்கை சீமையின் ஒரு பகுதியில் பனங்குடி என்ற ஒரு கிராமத்தில் ஒரு ஆகஸ்ட் புரட்சி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு வெளியில் தெரியாத சுதந்திரப் போராட்டத் தியாகிகளை நினைவு கூறுவோம்.

சிவகங்கையிலிருந்து 18கி.மீ துரத்தில் உள்ள பனங்கும் என்ற ஒரு சிறு கிராமம். இது சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய இடம் பெற்றது! 1942-ல் கிராமத்து மக்கள் அத்தனை பேரும் ஒன்ற சேர்ந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வெளியேற்ற வேண்டும் என்ற பலம் எண்ணத்தோடு அருகில் உள்ள ரயில்வே ஸ்டேசனுக்குச் சென்றனர். 1. அப்போது இரண்டு ரயில்பெட்டிகளை மட்டும் நிறுத்தி அதனை ஸ்டேசனாகப் பயன்படுத்தினர். அதிலேயே ரயில்வே டிக்கட்டுகளும் ஸ்டேசன் மாஸ்டருடைய மற்ற ரிக்கார்டுகளும் வைக்கப்பட்டிருந்தன

ஆங்கிலேயருடைய ஆட்சியின் சின்னமாக மக்கள் கண்ணில் அந்தப் பொருட்கள் தெரிந்தன! எனவே உணர்ச்சிவசப்பட்டு மக்கள் ஒன்று கங் கூடி அதில் தீ வைத்தனர். தீ எரிகின்ற போது மக்கள் வெள்ளையனே வெளியேறு! நேதாஜிக்கு ஜே எனக் கோஷமிட்டனர். அவரவர் வீடுகளுக்குத் திரும்பினர் மக்கள். பின்னால் கண்ணுச்சாமி அம்பலம் வீடு புகுந்து போலீசார் வீட்டை உடைத்துச் சின்னாபின்னப்படுத்தித் தீ வைத்தனர். கண்ணுச்சாமி அம்பலம் உள்பட 28 பேர்களை இந்திய தண்டனைச் சட்டம் 436வது பிரிவு இந்தியப் பாதுகாப்புச் சட்டம் விதிகள் 4 ஆர்டின்ஸ் 3ஆப் 1942 பிரிவுகளில் கீழ் வழக்குத் தருட தொடர்ந்தனர். அந்த வழக்கிலேயே அகில இந்தியக் காங்கிரஸ் ங் கமிட்டியினுடைய 9.08.1942 தேதி தீர்மானமும் அதன் தொடர்ச்சியாக தேவகோட்டை சம்பவம் திருவாடானைக் கருவூலக் கொள்ளை ஆகியவையே இந்தச் சம்பவத்திற்குக் காரணம் எனக்கூறி வெவ்வேறு சட்டப்பிரிவுகளின் படி ஐந்து வருடம் 6 மாதம் வரையில் ரூபாய் 800 அபராதமும் விதித்து அந்தத் தொகையினை ஒன்று சேர்த்து தென்னிந்திய ரயில்வேக்குக் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டு அலிபுரம் ஜெயிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கிராமத்தில் உள்ள அனைவருக்கும் கூட்டு அபராதம் விதிக்கப்பட்டது. 1. கண்ணுச்சாமி 2. மு.அடைக்கப்பன். 3. ரா.அருளானந்து 4. அரு.முத்தையா 5. செ.வேலு 6. யா.மு.கண்ணுச்சாமி 7. மு.கண்ணையா 8. வே.சோலைமலை 9. ஆ.சின்னக் கருப்பன் 10. சின்னப்பன். 11. பழ.வேலு. கீழ்க்கண்ட 1941ல் நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்குகொண்டு சிறைசென்றவர்கள் பலர். ஆர். விசாமிநாதன், எஸ்.ஓ.எஸ்பி.உடையப்பா, ஓரியூர் நா.வே.சொக்கலிங்கம் அம்பலம், காரைக்குடி-சா.கணேசன், திருநாவுக்கரசு செட்டியார் சிவகங்கை. எம்.எஸ்.ஆர்.சுப்பிரமணிய அய்யர், விளகனூர், இராமசாமி காரைக்குடி, ஸ்ரீனிவாசன், வீரனேரி பெரியண்ணன் அம்பலம். தியாகிகள் கலந்து கொண்டு மிகப்பெரிய சுதந்திரப் போராட்டம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு வரலாறாக தெரிய வருகிறது.

அதிலும் தமிழகத்தில் சுதந்திரப் போராட்டத்தில் இன்னும் அறியப்படாத ஆண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் அவர்களை நாம் தெரிந்து கொள்வது நமது கடமை ஆகும் . அகிம்சை என்பது எதிரியையும் நண்பனாக மாற்றும் ஒரு கருவி என்று கூறலாம் அன்பு காந்தியடிகளின் அறவழிப் போராட்டம் மற்றும் சுபாஷ் சந்திர போஸின் சுதந்திரப் போராட்டத்தில் பங்களிப்புகள் இவை நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு மிகப்பெரிய ஒரு பங்களிப்பை கொடுத்ததாகும்

இந்திய சுதந்திரம் என்பது முதலாவதாக தென்னிந்திய புரட்சி என்று ஆரம்பிக்கப்பட்டதாகும் 1800 -1801 ஆம் வருடம் தென்னிந்திய புரட்சி ஆரம்ப காலம் இந்தியாவின் முதல் சுதந்திர போராட்ட வீரர்களை தமிழகத்தை திரும்பி பார்க்க வைத்தவர் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் வழியில் மருது பாண்டியர்களின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு எடுத்தனர் ஆங்கிலேயருக்கு எதிராக தோன்றிய மிகப் பெரிய ஒரு புரட்சியை சுதந்திரப் போராட்டமாகும் அவ்வழியின் பின்னே அனைத்து மக்களும் இறங்கி ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரு மிகப்பெரிய சுதந்திரப் புரட்சியை ஏற்படுத்தினார்கள் அந்தப் பாதையில் சிவகங்கை மாவட்டத்தில் 1942 ஆம் ஆண்டு பனங்குடி என்ற கிராமத்தில் இந்தியா

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

முழுவதும் ஆகஸ்ட் புரட்சிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கங்கள் கோஷங்களும் புரட்சியாக வெடித்த பொழுது பழங்குடி என்ற ஒரு கிராமத்தில் ஒரு கிராமமே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆங்கிலருக்கு எதிராக வீரமுழக்கமட்ட செய்தியே நாம் அறிய வேண்டும் என்பது நமது கடமையாகும்.

சிறிய கிராமமாக இருந்தாலும் 29 சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்ந்துள்ளனர் இதில் ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்ட 15 சுதந்திரப் போராட்ட தியாகிகள் மேலும் இந்திய தேசிய ராணுவத்தில் 14 வீரர்களும் இந்த ஊரில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது இங்கு தியாகிகள் நினைவுத்தூள் ஒன்று விருப்பப்பட்டுள்ளது தியாகிகள் தூங்கவும் அங்கே உள்ளது 1990 இல் குச்சியா காந்தி கலெக்டராக இருந்தபோது இதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்து வந்தார் என்பதையும் நினைவு கூறத்தக்க விஷயமாக கருதப்படுகிறது மேலும் சுதந்திரப் போராட்டம் சுதந்திர தினம் போன்ற நாட்களில் இந்த தியாகிகள் நினைவுகளை மக்கள் வழிபட்டு நினைவு கூறி வருவது இந்த ஊரில் ஒரு சிறப்பான ஒரு வரலாறாக தெரிய வருகிறது மேலும் இந்த ஊரில் உள்ள சுதந்திர போராட்ட **தியாகி கண்ணுச்சாமி அவர்களின் மகன் மாசிலாமணி மற்றும் தியாகி ஏ ஆர் சந்தானம் அவருடைய வாரிசு இளங்கோ மேலும் தியாகி சின்னப்பன் வாரிசு சசி மற்றும் தியாகி V .மாணிக்கம் பேரன் டேவிட்சன் இவர்கள் கூறும் போது** 1942 ஆகஸ்ட் புரட்சியில் பனங்குடி கிராமத்திலிருந்து இந்த தியாகிகள் கலந்து கொண்டு மிகப்பெரிய சுதந்திரப் போராட்டம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு வரலாறாக தெரிய வருகிறது மேலும் இங்கு உள்ள ரயில்வே ஸ்டேஷன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இரண்டு ரயில் பெட்டிகளை ஆங்கிலேயர்களுக்கு எதிராக தீவைத்து கொளுத்தியும் தன் தாய் நாட்டில் சுதந்திர பற்றி வெளிப்படுத்தியும் போராட்டங்களை நடத்தியதாக தெரிய வருகிறது இந்தப் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்ட தியாகிகள் அவர்களின் வீடுகளை அப்பொழுதே ஆங்கிலேயர்கள் தீயிட்டு கொளுத்தியும் அவர்களை சிறையில் அடைத்தும் சித்தரவதை பண்ணியதாகவும் வாரிசுகள் கூறினார்கள் எங்கள் கிராமமே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டது எங்களுக்கு ஒரு மிகப்பெரிய சந்தோசமான ஒரு விஷயம் என்று அவர்கள் கூறினார்கள் இந்த தியாகிகளின் நினைவாகவே தியாகிகள் பூங்கா மற்றும் நினைவு தூண்களை நாங்கள் வழிபட்டு வருவதாகவும் கூறினார்கள். மேலும் இந்த சுதந்திர போராட்ட தியாகிகள்

**கண்ணுச்சாமி**



அவர்களுக்கு பாரத விடுதலையின் 25 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பங்கின் நினைவாக பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தியாகிகள் தாமிர பத்திரம் என்ற ஒரு பட்டயத்தை வழங்கியுள்ளனர்.

**ஏ ஆர் சின்னப்பன்**



மற்றும் தியாகி **ஏ ஆர் சின்னப்பன் 1942** ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்டு 5 மாதம் சிறை தண்டனை அனுபவித்தார். அவர்களுக்கு 1973இல் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் இந்திய நாட்டு விடுதலைப் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா நினைவாக விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாக செம்மலுக்குத் விருது வழங்கப்பட்டது மேலும்

**வே மாணிக்கம்**

மேலும் தியாகி **வே மாணிக்கம்** அவர்களுக்கு1973ல் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் இந்திய நாட்டு விடுதலைப் 25ம் ஆண்டு வெள்ளி விழா நினைவாக விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாக செம்மல் விருது வழங்கப்பட்டது.

**Ar சந்தனம்**



மேலும் தியாகி **Ar சந்தனம்** ஆகஸ்ட் புரட்சியில் பங்கு பெற்று சிறை சென்றார். மற்றும் ஏ சின்னகருப்பன் ஆகஸ்ட் புரட்சியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டார் இவருக்கு 4மாதம் சிறையில் அடைத்தனர் .

மற்றும் Ar.முத்தையா மற்றும் அனைவரும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்

மேலும் இவ்வாறு சிவகங்கை மாவட்டத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக மிகப்பெரிய புரட்சி நடந்தது என்பதில் சிறிதளவு மாற்றம் இல்லை மேற்கொண்டு 24.8.1942 அன்று பனங்குடி நடராஜபுரம் ரயில்வே நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு ரயில் பெட்டிகளும் தீ வைத்து கொளுத்தப்பட்டு சுதந்திரப் போராட்டம் மிகப்பெரிய ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கும் பொழுது சிவகங்கைச் சீமையின் ஒரு வெள்ளையனே வெளியேறு இயக்கம் இங்கே நடந்து கொண்டு இருந்தது இந்த ஆகஸ்ட் புரட்சி வெள்ளையனே வெளியேறு

ஏக்கமாக மாறி இந்திய சுதந்திர காற்றை சுவாசிக்க இந்த தியாகிகள் உயிரை தியாகம் செய்தனர் இவ்வாறு சுதந்திரப் போராட்டம் மிகப்பெரிய ஒரு புரட்சி ஏற்படுத்தியது என்பதில் எந்த ஒரு மாற்றமும் இல்லை

பணங்குடி கிராமத்தில் ஒரு சமத்துவம் சகோதரத்துவம் இன்றும் காணப்படுவது ஒரு மிகச் சிறந்த அமைப்பு இந்து கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களும் ஒன்று சேர்ந்து ஒரு சகோதரத்துவமாக விழாக்களை பரிமாறிக் கொண்டு சந்தோஷங்களை தெரியப்படுத்த வருகிற ஒரு சமாதானமான கிராமம் என்று தெரிய வருகிறது மேலும் இந்த ஊரின் சுதந்திர போராட்ட தியாகிகளின் நினைவுகளை வருங்கால சந்ததியினரும் இவர்கள் வாழ்க்கை வரலாறு தெரிந்து கொள்ள வேண்டும் வருங்கால சந்ததியினர் இந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளும் பெருமைகளையும் நினைவு கூர்ந்து வாழ வேண்டும் என்பதை மிகக் கடமையான ஒன்றாக கருதப்படுகிறது.

**நெல்லியான்**



காரைக்குடி அருகே கண்டனூர்-பாலையூர் பகுதியைச்சேர்ந்த ஆண்டியப்பன், சிகப்பி தம்பதிக்கு 16.8.1918-ல் மூத்த மகனாகப் பிறந்தார் நெல்லியான். இவர் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றபோது காரைக்குடியில் 12.8.1942-ல் ஆங்கிலேயப் படையின் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அந்த இடத்திலேயே வீரமரணம் அடைந்தார்.12.8.1942-ல் தடையை மீறி காரைக்குடியில் இன்றைய காந்தி சதுரங்கம் பகுதியில் போராட்டத்தில் பலர் ஈடுபட்டனர். போராட்டத்தை ஒடுக்க தடியடி நடத்தியும், துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டது. அதில் 24 வயதே ஆன கண்டனூர் பாலையூர் தீரன் நெல்லியான் துப்பாக்கிச் சூட்டில் உயிர் நீத்தார்.

**சா. கணேசன்**



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்டமும் மகாத்மா காந்தியடிகளும் மகாத்மா காந்தியடிகளுக்கும் தேவகோட்டைக்கும் தொடர்பு அமைந்தது. இதனோடு காரைக்குடி சார்ந்த தேசியவாதிகளான கம்பனப்பொடி சா. கணேசன், தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கனார், தேசிய போராட்ட வீரர் சொ. முருகப்பா போன்றோரும் காரைக்குடி பகுதிகள் சார்ந்து தேசிய போரட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கனார், தேசியப் போரட்ட வீரர் சொ. முருகப்பா ஆகியோர்

காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ள அமராவதி புதூர் சார்ந்தவர்கள் என்பதும் இங்குக் குறிக்கத்தக்கது. இவ்வகையில் தேச விடுதலைக்கான அறப்போட்டாங்களில் தேவகோட்டை சார்ந்த தொண்டர்கள் பங்கேற்று வந்தனர்.

காரைக்குடி சார்ந்த பகுதிகளில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் மிகப் பெரும் அளவில் நடத்தப்பெற்றது. 17.8.1942-ல் தொண்டர்கள் மக்களைத் திரட்டி அரசாங்க எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தினர். இவர்கள் மீது போலீசார் சுட்டனர். காரைக்குடியில் ஒருவர் உயிர்துறந்தார்.தேவகோட்டையில் கிருஷ்ணன், தர்மராஜன் என்ற இரு இளைஞர்களும், வள்ளியம்மை என்ற மூதாட்டியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தேவகோட்டை நீதிமன்றம், திருவேகம்பத்து தாலுகா கச்சேரி, ஜமீன் களஞ்சியம் ஆகியவைகளுக்கு தீவைக்கப்பட்டன. தொண்டர்கள் 24.8.1942-ம் தேதி பனங்குடி நடராஜபுரம் ரயில் நிலையத்திற்கு தீ வைத்து தகர்த்தனர்.

**தேவகோட்டை ஆகஸ்ட் புரட்சி**



'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை காந்தியடிகள் 1942ம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியாக அறிவித்தார். நாடெங்கிலும் சுதந்திர வேட்கையில் மக்கள் திரண்டெழுந்தனர். ஆங்கிலேயர்கள் மிரளும் அளவிற்கு திறந்தவெளி சிறைச்சாலையில் மக்கள் வெள்ளம். 1942ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் தேதியன்று நாடெங்கிலும் 144 தடை உத்தரவு அமல்படுத்தப் பட்டது. அதையும் மீறி தேவகோட்டையில் ஆங்கிலேயர்களை எதிர்த்து பொதுக்கூட்டம் நடந்தது. தேவகோட்டையை சேர்ந்த சின்ன அண்ணாமலை செட்டியார், டி.எஸ்.ராமநாதனை கைது செய்தனர்.

கைதானவர்களை திருவாடானை(தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது) சிறையில் அடைத்தனர். இதுதான் தேவகோட்டை பகுதியில் 'ஆகஸ்ட் புரட்சி என்ற வேள்வித்தீ' உருவாக காரணமாக இருந்தது. 1942 ஆகஸ்ட் 15ம் தேதியன்று நள்ளிரவில் திருவேகம்பத்தூர், திருவாடானை இரண்டு ஊர்களுக்கும் இடையே உள்ள பாலங்களை தகர்த்தெறிந்தனர். போக்குவரத்து தடையை ஏற்படுத்தினர். 17ம் தேதி காலை அபிராமம் முத்தையா,

**DOI: https://doi.org/10.63300/tm12032026.35**

திருவேகம்பத்தூர் ஜெயராம அய்யர் ஆகியோர் சைக்கிள் மூலம் தொண்டி சென்று தொலை தொடர்பு இணைப் புகளை துண்டித்தனர்.

திருவாடானை சிறைச்சாலையை சுதந்திர போராட்ட வீரர்கள் தகர்த்தெறிந்தனர். சின்னஅண்ணாமலை, டிஎஸ்ராமநாதன் மற்றும் கைதாகி இருந்த 30 பேரையும் மீட்டனர். சிறை கஜானாவை சூறையாடினர். தாலுகா அலுவலகம், போலீஸ் நிலையம், துணைப்பதிவாளர் அலுவலகம் சூறையாடப் பட்டது. அதனைத்தொடர்ந்து போராட்ட வீரர்கள் தேவகோட்டையை நோக்கி வந்தனர். ஆங்கிலேயர்கள் போராட்ட வீரர்களை சுட்டு வீழ்த்தப்போவதாக மிரட் டினர். 'எதற்கும் தயார்' என துணிந்து நெஞ்சை நிமிர்த்தி போராட்டத்தில் குதித்தனர். இதில் போலீசாரின் துப்பாக்கிக்கு முத்திருளப்பன் முதல் இரையானார். வெகுண்டெழுந்த வீரர்கள் தேவகோட்டை நீதிமன்றத்திற்குள் நுழைந்தனர். நீதிமன்றத்தை சூறையாடி அங்கிருந்த ஆவணங்களையும், பொருட்களையும் தீக்கிரையாக்கினர். வெள்ளையர்கள் நடத்திய சிம்சன் கம்பெனி பஸ்களை தீயிட்டு கொளுத்தினர். இதனைக்கண்டு ஆத்திரம் அடைந்த ஆங்கிலேயர்கள் போராட்ட வீரர்கள் மீது துப்பாக்கியால் சரமாரி சுட்டனர்.

இதில் 75 தியாகிகள் தங்கள் உயிரை ஆங்கிலேயர்களின் தோட்டாக்களுக்கு பலிகொடுத்துள்ளனர்.இதில் கள்ளர்கள் மட்டும் 46 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். கைது செய்யப் பட்ட போராட்ட வீரர்களையும் சுட்டு வீழ்த்தி பிணமான வீரர்களையும் ஒரே வண்டி யில் கொண்டு சென்றனர். 112 பேர் மீது வழக்கு பதியப்பட்டது. வெள்ளளூர் கள்ளர்நாட்டிற்கு அடுத்தபடியாக சுதந்திரத்திற்காக அதிக இரத்தம் சிந்திய பூமி தேவகோட்டைதான்.

இதன் நினைவாக இந்தியா சுதந்திரம் அடைந்த தினத்தன்று சுதந்திர போராட்ட வீரர்களின் நினைவாக தியாகிகள் மடிந்த இடத்தில் பூங்கா உருவானது. அதில் நினைவு ஸ்தூபி எழுப்பினர். தேவகோட்டை நகராட்சி அலுவலகம் எதிரில் இப்போது கம்பீரத்தோற்றத் துடன் காட்சியளிக்கும் தியாகிகள் நினைவு ஸ்தூபி. நீதிமன்றம் கொளுத்தப்பட்ட வீதி தற்போது தியாகிகள் சாலை என பெயர் விளங்கி வருகிறது.

'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை காந்தியடிகள் 1942ம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியாக அறிவித்தார். நாடெங்கிலும் சுதந்திர வேட்கையில் மக்கள் திரண்டெழுந்தனர். ஆங்கிலேயர்கள் மிரளும் அளவிற்கு திறந்தவெளி சிறைச்சாலையில் மக்கள் வெள்ளம். 1942ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் தேதியன்று நாடெங்கிலும் 144 தடை உத்தரவு அமல்படுத்தப் பட்டது. அதையும் மீறி தேவகோட்டையில் ஆங்கிலேயர்களை எதிர்த்து பொதுக்கூட்டம் நடந்தது. தேவகோட்டையை சேர்ந்த சின்ன அண்ணாமலை செட்டியார், டி.எஸ்.ராமநாதனை கைது செய்தனர்.


கைதானவர்களை திருவாடானை(தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது) சிறையில் அடைத்தனர். இதுதான் தேவகோட்டை பகுதியில் ‘ஆகஸ்ட் புரட்சி என்ற வேள்வித்தீ’ உருவாக காரணமாக இருந்தது. 1942 ஆகஸ்ட் 15ம் தேதியன்று நள்ளிரவில் திருவேகம்பத்தூர், திருவாடானை இரண்டு ஊர்களுக்கும் இடையே உள்ள பாலங்களை தகர்த்தெறிந்தனர். போக்குவரத்து தடையை ஏற்படுத்தினர். 17ம் தேதி காலை அபிராமம் முத்தையா, திருவேகம்பத்தூர் ஜெயராம அய்யர் ஆகியோர் சைக்கிள் மூலம் தொண்டி சென்று தொலை தொடர்பு இணைப் புகளை துண்டித்தனர்.

திருவாடானை சிறைச்சாலையை சுதந்திர போராட்ட வீரர்கள் தகர்த்தெறிந்தனர். சின்னஅண்ணாமலை, டிஎஸ்ராமநாதன் மற்றும் கைதாகி இருந்த 30 பேரையும் மீட்டனர். சிறை கஜானாவை சூறையாடினர். தாலுகா அலுவலகம், போலீஸ் நிலையம், துணைப்பதிவாளர் அலுவலகம் சூறையாடப் பட்டது. அதனைத்தொடர்ந்து போராட்ட வீரர்கள் தேவகோட்டையை நோக்கி வந்தனர். ஆங்கிலேயர்கள் போராட்ட வீரர்களை சுட்டு வீழ்த்தப்போவதாக மிரட் டினர். ‘எதற்கும் தயார்’ என துணிந்து நெஞ்சை நிமிர்த்தி போராட்டத்தில் குதித்தனர். இதில் போலீசாரின் துப்பாக்கிக்கு முத்திருளப்பன் முதல் இரையானார். வெகுண்டெழுந்த வீரர்கள் தேவகோட்டை நீதிமன்றத்திற்குள் நுழைந்தனர். நீதிமன்றத்தை சூறையாடி அங்கிருந்த ஆவணங்களையும், பொருட்களையும் தீக்கிரையாக்கினர். வெள்ளையர்கள் நடத்திய சிம்சன் கம்பெனி பஸ்களை தீயிட்டு கொளுத்தினர். இதனைக்கண்டு ஆத்திரம் அடைந்த ஆங்கிலேயர்கள் போராட்ட வீரர்கள் மீது துப்பாக்கியால் சரமாரி சுட்டனர்.

இதில் 75 தியாகிகள் தங்கள் உயிரை ஆங்கிலேயர்களின் தோட்டாக்களுக்கு பலிகொடுத்துள்ளனர்.இதில் கள்ளர்கள் மட்டும் 46 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். கைது செய்யப் பட்ட போராட்ட வீரர்களையும் சுட்டு வீழ்த்தி பிணமான வீரர்களையும் ஒரே வண்டி யில் கொண்டு சென்றனர். 112 பேர் மீது வழக்கு பதியப்பட்டது. வெள்ளளூர் கள்ளர்நாட்டிற்கு அடுத்தபடியாக சுதந்திரத்திற்காக அதிக இரத்தம் சிந்திய பூமி தேவகோட்டைதான்.

இதன் நினைவாக இந்தியா சுதந்திரம் அடைந்த தினத்தன்று சுதந்திர போராட்ட வீரர்களின் நினைவாக தியாகிகள் மடிந்த இடத்தில் பூங்கா உருவானது. அதில் நினைவு ஸ்தூபி எழுப்பினர். தேவகோட்டை நகராட்சி அலுவலகம் எதிரில் இப்போது கம்பீரத்தோற்றத் துடன் காட்சியளிக்கும் தியாகிகள் நினைவு ஸ்தூபி. நீதிமன்றம் கொளுத்தப்பட்ட வீதி தற்போது தியாகிகள் சாலை என பெயர் விளங்கி வருகிறது.

**'காந்தி' நாரயணன்**



இன்றைய சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையைச் சேர்ந்த நாராயணன் காந்தியக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். அதன்காரணமாக 'காந்தி' நாரயணன் அல்லது 'காந்தி நாவன்னா' என்றே நண்பர்களாலும் ஊர் மக்களாலும் அழைக்கப்பட்டார். அப்படி அழைக்கப்படும் அளவுக்கு காந்தியக் கொள்கைகளை தீவிரமாக அவர் பின்பற்றிவந்தார். தானே நூல் நூற்று, கதராடை அணியும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

1920-களுக்குப் பிறகு தமிழகத்தின் பல ஊர்களுக்கும் காந்தி பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணங்களின்போது 1921, 1927, 1934 ஆகிய ஆண்டுகளில் தேவகோட்டைக்கும் காந்தி வந்துள்ளார். காந்தி நாராயணனின் வாழ்க்கையில் 1934 மிகவும் முக்கியமான ஆண்டு. ஜனவரி மாதம் 27, 28 ஆகிய நாள்களில் காந்தி தேவகோட்டைக்கு வந்திருந்தார். காரைக்குடியில் இருந்து வந்த காந்திக்கு தேவகோட்டையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. 'காந்தி வரவேற்புக் குழு' தலைவராகச் செயல்பட்ட நாராயணன், அன்றைய மதிப்பில் ரூ.2,600 ரூபாய் (இன்று லட்சக்கணக்கில் இருக்கும்) பண முடிப்பை காந்தியிடம் வழங்கினார்.

தேவகோட்டை முனியய்யா கோயில் பொட்டலுக்கு அருகே 'காந்தி' நாரயணனின் தோட்டம் இருந்தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காந்தி பேசினார். பிறகு 'காந்தி' நாராயணனின் மூத்த மகளுக்கு சாவித்திரி என்று பெயர் சூட்டினார். அது மட்டுமல்லாமல், அந்தப் பெண்ணின் ஒளிப்படத்தில் கையெழுத்திட்டும் கொடுத்தார். அதற்கு மரியாதை செய்யும் வகையில் நாராயணனின் மனைவி சிவகாமி, காந்திக்கு ஒரு வெள்ளித் தட்டையும் ஒரு பவுன் தங்கத்தையும் வழங்கினார். அடுத்த நாள் ராம் நகருக்குச் சென்ற காந்தி, தலித் குழந்தைகளுக்கான பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் காந்தியவாதிகளான கைத்தான் தம்பதிகள், இவருடன் இணைந்து பணிகளில் ஈடுபட்டுவந்தனர். ராட்டையில் தான் நூல் நூற்ற சிட்டங்களை காந்தியடிகளிடம் கொடுக்கும்படி கைத்தான் தம்பதிகளிடம் 'காந்தி' நாராயணன் 1937இல் கொடுத்து அனுப்பினார். ஹரிஜன நிதிக்காக அதைப் பயன்படுத்திக்கொள்வதாகக் கூறிய காந்தி, நாராயணனைப் பாராட்டும் வகையில் தன் கைப்படக் கடிதம் எழுதி, தமிழில் மோ.க. காந்தி என்று கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார். கடிதத்தை ஆங்கிலத்தில்

எழுதியிருந்தாலும், தமிழ் மக்களுக்கு கடிதம் அனுப்பும்போது தமிழில் கையெழுத்திடுவதை காந்தி வழக்கமாக வைத்திருந்தார். தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே காந்தி, தமிழ் கற்றிருந்தார். காந்தி நாரயணனுக்கு காந்தி அனுப்பிய அந்தக் கடிதம், மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தேசியச் செல்வர் சின்ன அண்ணாமலை**



இந்திய நாடு தற்போது தனது விடுதலையின் 76ம் ஆண்டினைக் கொண்டாடி வருகிறது. ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுபடவும், இந்திய மண்ணின் விடுதலைக்காகவும் பலர் போராடினர். இந்திய அரசியல் தலைவர்கள் பலர் இதற்காக தலைமை வகித்த நிலையில் இத்தலைமையை ஏற்று விடுதலை வேள்வியில் கலந்து கொண்டுத் தங்களின் உயிரை, பொருளை, குடும்பத்தாரை இழந்தவர்கள் பலர்.

தமிழ்நாட்டில் பற்பல இடங்களில் விடுதலைப் போராட்ட வேள்விகள் நடைபெற்றன. ஆங்கிலேயரை எதிர்த்து உப்புசத்தியாகிரகம் வேதாரண்யத்தில் மிகப் பெரும் அளவில் நடைபெற்றது. இதுபோன்று வரலாற்றில் குறிக்கத்தக்க விடுதலைப் போராட்ட செயல்கள் பல நடைபெற்றுப் பதிவுபெற்றுள்ளன. ஆனால் பதிவு பெறாமலும் கண்டு கொள்ளப்படாமலும் விடுபட்ட விடுதலைப் போராட்டங்கள் பல உண்டு. விடுதலைப் போராளிகளும் பலர் உண்டு.

**தேசியச் செல்வர் சின்ன அண்ணாமலை**

தேசியச் செல்வர், தியாகத் செம்மல், தமிழ்த் தொண்டர் என்றெல்லாம் அழைக்கபட்ட சின்ன அண்ணாமலை, 1920ம் ஆண்டு ஜூன் மாதம், சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் பிறந்தவர். தான் வாழ்ந்த அறுபது ஆண்டுகளில் 50 ஆண்டுகளை நாட்டிற்காக அர்ப்பணம் செய்தார்.

**தேசபக்தர்களின் பாசறையாக 1942ல் நடந்த ஆகஸ்டு புரட்சியில்**

அப்போது காந்தியடிகள் இரண்டாவது யுத்த எதிர்ப்பு பிரசாரம் செய்ய தனிப்பட்ட சத்யாகிரகம் துவக்கினார். இவர், சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் யுத்த எதிர்ப்பு பிரசாரம் செய்யும் போது, கைது செய்யப்பட்டு, ஆறு மாத சிறை தண்டனை பெற்றார். 1941ல் தமிழிசை மாநாடு ஒன்றை நடத்தி, தமிழிசைப் பள்ளி ஒன்றை நிறுவினார்.

1942ல் நடந்த ஆகஸ்டு புரட்சியில் தன்னை அர்ப்பணித்து, நாடு, நகரெல்லாம் சுற்றினார். அதனால், அரசாங்கம் இவரை கைது செய்தது. இதைக் கண்டு கொதித்தெழுந்த தேவகோட்டை மக்கள், இவரை கொண்டு சென்ற பஸ்சை தீ வைத்து கொளுத்தினர். பின் கோர்ட்டுக்கும் தீ வைத்தனர். அதில், அரசாங்கத்தால் 65 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த கலவரத்தை காரணம் காட்டி, இவருக்கு நாலரை ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கில் ராஜாஜி ஆஜராகி எதிர்ப்பான கேசை உடைத்து ஆறு மாதத்தில் விடுதலை செய்ய வைத்தார். பின் ராஜாஜி ஆலோசனைப்படி சென்னைக்கு வந்தார். சென்னை தியாகராய நகரில் தமிழ்ப்பண்ணை என்ற புத்தகாலயத்தை துவக்கினார். அது, தேசபக்தர்களின் பாசறையாக இயங்கியது.

**திருவாடனை சிறை உடைப்பு**

உங்களுக்குச் சின்ன அண்ணாமலையைத் தெரியுமா? ……… தெரியாதா? தெரிந்திருக்க வேண்டுமே. அவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். அவருக்காக இருபதாயிரம் மக்கள் ஒன்று சேர்ந்து அவர் அடைக்கப்பட்டிருந்த திருவாடனை சப் ஜெயிலை உடைத்து அவரை வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். இப்போது அல்ல 1942 ஆகஸ்ட் புரட்சியின் போது. கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்களின் உறவினர். தேவகோட்டை வாசி. நல்ல தமிழ் அன்பர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் நெருங்கிய தோழர். ராஜாஜியின் தொண்டர், 'சிறிய திருவடி' என்று அன்போடு அழைக்கப் பட்டவர். தமிழ்ப் பண்ணை எனும் புத்தக வெளியீட்டகம் நடத்தியவர். தமிழரசுக் கழகத்திற்காக "சங்கப் பலகை" எனும் பத்திரிகை நடத்தியவர். கம்பீரமான தோற்றம். சிறந்த பேச்சாளர். நகைச்சுவை உணர்வு அதிகம். அப்படிப்பட்டவரைப் பற்றி பெருந்தலைவர், கர்மவீரர் காமராஜ் அவர்கள் சொன்னதைப் பார்க்கலாம்.

"நாட்டுக்கு நமது சின்ன அண்ணாமலை செய்திருக்கும் சேவை மகத்தானது. அவருடைய பேச்சைக் கேட்டுப் பல இளைஞர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது எனக்குத் தெரியும். சின்ன அண்ணாமலையின் தலைக்கு விலை வைத்தது ஆங்கில அரசாங்கம். ஒரு மாதம் வெள்ளைக்கார அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைத்தவர் சின்ன அண்ணாமலை. இவரைக் கைது செய்ய முடியாமல் இவரது பெற்றோரையும் உற்றார் உறவினர்களையும் சொல்லொணாக் கொடுமைகள் செய்தது ஆங்கில ஏகாதிபத்யம். போலீசாரின் துப்பாக்கி முன் அஞ்சாது மார்பைக் காட்டி நின்று 'வந்தேமாதரம்' என்று முழங்கியவர் சின்ன அண்ணாமலை. ஆங்கில அரசாங்கம் 1942 ஆகஸ்டில் இவரைக் கைது செய்து திருவாடனை சிறையில் அடைத்தது. 24 மணி நேரத்தில் மக்கள் ஒன்று திரண்டு அச்சிறையைப் பட்டப் பகலில் உடைத்து இவரை விடுதலை செய்து விட்டார்கள்.

**சின்ன அண்ணாமலையின் 'வெள்ளையனே வெளியேறு'**

1942-ல் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' ஆகஸ்டு புரட்சியைத் தொடங்கியபோது ஊர் ஊராகப்போய் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மேடைப் பிரச்சாரம் செய்தார். அதனால், சின்ன அண்ணாமலையைக் கைதுசெய்ய போலீஸார் நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். 1942 ஆகஸ்டு 9 அன்று காந்தி கைதுசெய்யப்பட்ட தினத்தில், தேவகோட்டை ஜவஹர் மைதானத்தில் சின்ன அண்ணாமலை பேச ஏற்பாடாகியிருந்தது. பெருங்கடலென தேச பக்தர்களின் கூட்டம் கூடியிருந்தது. அப்போது மேடையேறி கைதுசெய்ய முடியாமல் மக்களால் துரத்தியடிக்கப்பட்ட போலீஸார், பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு அவரைக் கைதுசெய்து, தேவகோட்டையிலிருந்து 22 மைல் தொலைவிலிருந்த திருவாடானை சிறையில் அடைத்தார்கள்.

இப்படி மக்களே சிறையை உடைத்து விடுதலை செய்தது உலக சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவையாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அப்படி சரித்திரத்தில் எழுதப்பட வேண்டிய சிறந்த தியாகி சின்ன அண்ணாமலை.

**சிவகங்கை. கண்ணவரம் அம்மையார்**



இவர் விடுதலை போராட்ட வீரர் சிவகங்கை வழக்கறிஞர் ராமானுஜ அய்யரின் மனைவி ஆவார். இவர் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட தமது கணவருக்கும் பல வழிகளில் ஆதரவளித்தார். காந்திய தீர்மானத் திட்டத்தில் ஈடுபட்டுத் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொண்டாற்றியவர் வைத்தியநாததைய்யரின் அரிசன் ஆலயம் பிரவேசத்திற்கு பெரிதும் உதவியது. சிவகங்கை அரிசன விடுதியில் முழுமையாகப் பணியாற்றினார்.

**முடிவுரை**

இந்திய சுதந்திரப் போராட்டம் உலக வரலாற்றில் ஒரு தனித்துவத்தைப் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் இந்திய சுதந்திரப் போராட்ட வழிமுறைகளாகும். அவற்றில் காந்திஜியின் சத்தியாகிரகம் மற்றும் அகிம்சை வழிப் போராட்டங்களும் அவருடைய தலைமையும் மிக முக்கியக் காரணமாகும். அகிம்சை மற்றும் சத்தியாகிரகப் போராட்டங்கள் போர் முனையில் ஆயுதங்களைக் கொண்டு போர் புரிதலைவிட வலிமையான ஆயுதமாகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாது மிகப் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறானது ஆங்கிலேயர்களின் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக சுமார் 200 ஆண்டுகள் நடைபெற்ற ஒரு நீண்ட போராட்டமாகும். இப்போராட்டத்தில் தேசத் தலைவர்கள் மட்டுமல்லாது அதிக ஆண்களும் அளவில் பெண்களும் இளைஞர்களும் கலந்து கொண்டனர். இதில் சுதந்திர போராட்ட வீரர்கள் பங்கு

போற்றுதலுக்குரியதாகும். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். அவர்கள் தியாகம் இன்னும் வெளியுலகிற்கு தெரியவில்லை.

**Works Cited**

[1]. Balasubramanian, T. "Mahatma Gandhi's Life and Freedom Struggle." *Journal of Shanghai Jiaotong University*, vol. 16, no. 7, 2020, pp. 928–941, https://shjtdxxb-e.cn/page.928-941.
[2]. Balasubramanian, T., and V. Venkatraman. "Biographies of the Unsung Women Freedom Fighters of Tamil Nadu." *Journal of Historical Studies and Research (JHSR)*, vol. 6, no. 1, 2026, pp. 149–164, http://www.jhsr.in/.
[3]. ---. "Chakravathi Rajagopalachari in Indian National Politics: An Analytical Study." *The Journal of Indian Art History Congress*, vol. 27, 2020–2021.
[4]. ---. "Gandhi's Views on Swadeshi Nationalism." *Kala: The Journal of Indian Art History Congress*, 2021, pp. 60–66.
[5]. ---. "Principles and Peace Communication of Mahatma Gandhi: A Semiotic Analysis." *Utkal Historical Research Journal*, 2021, pp. 197–201.
[6]. ---. "Sardar Vallabhbhai Patel: An Analysis." *Indian Journal of Natural Sciences*, vol. 10, no. 62, 2020, pp. 27982–27989.
[7]. ---. "Unsung Women's Freedom Fighters of Tamil Nadu 1752–1947." *HISTORICAL: Journal of History and Social Sciences*, vol. 5, no. 1, 2026, pp. 17–31, https://doi.org/10.58355/historical.v5i1.237.
[8]. ---. "V.O. Chidambaram Pillai: The Vision and Mission of Swadeshi Nationalist of Tamil Nadu." *Kala: The Journal of Indian Art History Congress*, vol. 27, no. 1, 2021, pp. 33–41.
[9]. Ganesan, S. *Viduthalai Poril Madurain Pangu*. Shunmugam Publishers.
[10].Government of Tamil Nadu, Law (General Dept.). *G.O. No. 2483*. 12 June 1930.
[11].---. *G.O. No. 3050*. 18 Aug. 1932.
[12].Ilamathy, Sivalai. *Sarithiratai Matriya Sati Vazhakkuhal*. Alagal Publishers, 2001.
[13].Kaur, Manmohan. *Women in India's Freedom Struggle*. New Delhi, 1985.
[14].Muruganatham, S. *Nadanthai Vazhi*. Kaveri Pathipagam, 2002.
[15].Palanisamy, K. P. *Viduthalai Velviyil Tahmizaham*.
[16].Pandian, S. *Gandhi Memorial Museum Report/Publication*. Madurai, 1997.
[17].Rajalakshmi, V. *The Political Behaviour of Women in Tamilnadu*. New Delhi, 1985.
[18].Samy, V. N. *The Role of Tamil Women in the Indian National Movements*. Kavitha Publications, 2003.
[19].Somayajulu, S. N. *Madurai Mavatta Sudhanthira Poratta Varalaru*.
[20].Sundaram, S. M. *The True Fighters of Tamil Nadu*.
[21].*The Hindu* [Chennai], 14 Aug. 2013.
[22].Venkatraman, V. "Sunthrasangu and Salt Satyagraha Movement in Tamilnadu, 1930–1931." *e-Journal*, 2018.
[23].*Who's Who of Freedom Fighters (Tamil Nadu)*. Vols. 1–2, Director of Stationery, Madras / Government of Tamil Nadu, 1973, pp. 27–48.
[24]."Women Martyrs of India's Freedom Struggle in Tamil Nadu." *ICHR Proceedings*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).